1982 மார்ச் 25]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதையெல்லாம் தான் மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதியிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் காட்டுகிற ஆர்வத்தை பார்த்தால் அவர்கள் நமக்குக்கொஞ்சம் ஆதரவாகச் சொன்னால் அது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழனி வட்டத்திலுள்ள ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்.

* வினா எண். 663—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் எத்தனை இயங்குகிறது ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் ?

(இ) அரசு செய்யும் உதவி என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பழனி வட்டத்தில் 16 ஆடு வளர்ப்புக்கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன.

(ஆ) அவை கீழ்க்கண்ட இடங்களில் இயங்குகின்றன :

(1) பெரிய களம்புத்தூர், (2) அய்யம்புலி கரும்பப்பட்டி, (3) கீரனூர், (4) புளியம்பட்டி, (5) ஆயக்குடி, (6) காட்டுப்பட்டி, (7) கணக்கன்பட்டி, (8) கேதையிரும்பு, (9) அப்பியப்பாளையம், (10) புங்கமுத்தூர், (11) அம்பிளிக்கை, (12) கரியாம்பட்டி, (13) எஸ். அத்திக்கோம்பை (14) பெத்தேல்புரம், (15) ஒடைப்பட்டி, (16) கே. அத்திக்கோம்பை.

(இ) அரசு செய்யும் உதவி பின்வருமாறு—கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்களுக்குக் கால்நடை மருத்துவர்கள் கால்நடை பராமரிப்பு, சுகாதாரம் சம்பந்தமான அறிவுரைகள் அவ்வப்போது வழங்கியும் ஆடுகளுக்கு நோய் சம்பந்தமான சிகிச்சை முறைகள் செய்தும் குடல் புழுக்களுக்கு பூச்சி மருந்துகள், தடுப்பு முறைகள் கையாண்டும் ஆடுகளுக்குத் தொற்று நோய்கள் வராது தடுப்பு ஊசிகள் போட்டுப் பாதுகாப்பு முறைகள் செய்தும் அவ்வப்போது இலாகா அலுவலர்கள் பராமரிப்பு சம்பந்தமாக அறிவுரைகள் கூறியும் உதவி செய்தும் வருகிறார்கள். சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 20 பெண் செம்மறி ஆடுகளும் 1 ஆண் செம்மறி ஆடும் கொண்ட மந்தை ஒன்று வாங்குவதற்கு 3,500 ரூபாய் முதல் 4,000 ரூபாய் வரை தேசியமய

மாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இது வரை பழனி வட்டத்தில் 400 செம்மறி ஆட்டு மந்தைகளுக்குக் கடன் வாங்கி வழங்கப்பட்டிருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட கடன் தொகையில், ஒருங்கி ணக்கப்பட்ட கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறுவிவசாயிகளுக்குக் கால் பங்கும் மிகச்சிறிய விவசாயிகளுக்கு மூன்றில் ஒரு பங்கும் மானிய மாக வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடை நீண்டதாக இருந்தால் அதை அச்சிட்டு அறிக்கையாக வைத்துவிடலாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டத்தில் 16 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அவர்களுக்கு 3,500 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் தெரிந்த அளவிலே 16 ஆடுவளர்ப்புச் சங்கத்திலே எங்கேயும் கடன் கொடுத்ததாகத் தெரியவில்லை. 400 ஆடுகள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏதோ ஒரு சங்கத்திற்குத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது இந்த அரசாங்கத்தினுடைய நோக்கத்தையே முறியடிக்கக் கூடிய வகையிலே இருக்கிறது. சங்கங்களை 1, 2 ஆண்டுக் காலமாக ஆரம்பித்தும் ஆயிரம் இரண்டாயிரம் என்று பணம் கட்டியும் ஒன்றும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதைப் பற்றி நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே சொல்லி இருக்கிறேன், இங்கேயும் சொல்லியிருக்கிறேன். சொல்லியும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அமைச்சர் அவர்கள் இதிலே தனி கவனம் செலுத்தி ஆவன செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மதுரை மாவட்டத்திலே பழனி வட்டத்தில் 16 கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதிலே 5 சங்கங்களிலே கடன் உதவி வழங்கியிருக்கிறார்கள். மீதியுள்ள 11 சங்கங்களுக்கு தேவையான வசதிகள் குறிப்பிட்ட வங்கிகள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். பழனிவேல் : அமைச்சர் அவர் ள் ஆலோசனைகள் வழங்கி வருவதாகச் சொன்னார்கள். ஆலோசனை வழங்குவதாலே எந்தக் காரியமும் நடக்கவில்லை. ஏழை எளிய விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டால் அந்தத் தொழிலும் அபிவிருத்தி அடையும், கால்நடை அபிவிருத்தியும் ஏற்படும். ஆகவே இந்த 11 சங்கங்களிலே உள்ளவர்களுக்கு

[1982 மார்ச் 25]

ஆடுகள் வாங்கிக் கொடுக்கின்ற முறையிலே பணம் வங்கிகள் போடுகின்ற நிபந்தனைகளை ரத்து செய்யக்கூடிய முறையிலேயும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இந்த 11 சங்கங்கள் ஐ.ஓ.பி., இந்தியன் பாங்க், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் கேட்டு மனுக் கொடுத்திருக்கிறார்கள். மிக விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

பர்மா அகதிகளுக்கு வியாசர்பாடியில் வீடு கட்டித்தரும் திட்டம்.

*வினா எண். 664—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வியாசர்பாடியில் அரசு நிலத்தில் வீடு கட்டித்தரும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் இப்பொழுது எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) 2,140 குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட தலா ரூ. 6,000 வீதம் வீட்டுக் கடன் அங்கீகரிக்கப்பட்டு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரிடம் மொத்த தொகை ஒப்படைக்கப் பட்டுள்ளது. 600 வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவும், 1,540 வீடுகள் ஆதி திராவிடர் வீட்டுவசதி கழகத்தின் மூலமாகவும் கட்டுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, 1,021 குடும்பங்களுக்கு வீடுகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதில் 729 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 143 வீடுகள் கூரை அளவு வரை கட்டப் பட்டு இருக்கின்றன. மீதமுள்ள 149 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலையில் இருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் மொத்தம் எத்தனை பேர் ? அதிலே ஒரு சிலருக்கு வீட்டு மனை பட்டா கொடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?